புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை** : திரு. இ. மூக்கையா, பி.காம்.,

செ.மு.ந.க 4980/2019/ஆ1 நாள்: 06.11.2019

பொருள் : பணியமைப்பு - கருவூல கணக்குத்துறை - புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலகு - ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகளுக்கான தேர்வுகள் II 2017 - 2018 ல் அடங்கிய பணிகளுக்காக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் - நேரடி நியமன கணக்கர்களாக பணிநியமனம் செய்யப்பட்டோர்- பணிவரன்முறை செய்தல் - ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்.191, பொதுத்துறை நாள்:01.02.1962
2. தமிழ்நாடு அரசு தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண் ந.க. 6010/PSD-D/2018 நாள் 01.11.2018.
3. முதன்மை செயலர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க. 42506/2018/C3 நாள் 19.11.2018.

*****_____*****

## ஆணை:

பார்வை 3ல் காணும் முதன்மை செயலர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகளுக்கான தேர்வுகள் II, 2017 - 2018 ல் அடங்கிய பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டு புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நேரடி நியமனம் மூலம் கணக்கர்களாக பணியமர்த்தப்பட்ட கணக்கர்களுக்கு கணக்கர் பதவியில் அவர்கள் பணியில் சேர்ந்த நாளில் இருந்து, தமிழ்நாடு அரசு சார்பணியாளர்கள் பொது விதி 23(a)-ன்படி சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகளுக்கான தேர்வுகள் II, 2017- 2018-ன் தெரிவு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன், கீழ்கண்டவாறு வரன்முறை செய்யப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | த.அ..ப தேர்வு வ. எண் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. சீ. கிருஷ்ணமூர்த்தி, கணக்கர் | 66 | 03.12.2018 மு.ப. | 03.12.2018 மு.ப. | மாவட்ட கருவூலம், புதுக்கோட்டை. |
| 2. | திருமதி. ந. பிரபாவதி, கணக்கர் | 11 | 04.12.2018 மு.ப. | 04.12.2018 மு.ப. | மாவட்ட கருவூலம், புதுக்கோட்டை. |
| 3. | திருமதி. பி. முத்துலெட்சுமி, கணக்கர். | 58 | 14.12.2018 மு.ப. | 14.12.2018 மு.ப. | சார்நிலை கருவூலம், ஆலங்குடி. |
| 4. | திரு. த. மணிகண்டன், கணக்கர். | 21 | 01.02.2019 மு.ப. | 01.02.2019 மு.ப. | மாவட்ட கருவூலம், புதுக்கோட்டை. |

சம்மந்தப்பட்டவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் கீழ்காணும் துறைத்தேர்வுகளிலும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியிலும் கலந்து கொண்டு தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1. சார் நிலை அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம் - 1
2. சார் நிலை அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம் - 2
3. தமிழ்நாடு அலுவலக நடைமுறைத்தேர்வு.

5/1

கருவூல அலுவலர்,
புதுக்கோட்டை.

பெறுநர்:

1. சம்மந்தப்பட்டவர்கள் - உரிய வழிமுறையாக.
2. உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம் - ஆலங்குடி
   - சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளும்படியும் அதன்விபரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. பி1/இருப்புகோப்பு.